1972 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(சட்டப் பேரவை முன் வடிவு எண் 32/1972) நிறைவேற்றப்பட வேண்டும்**"**. என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972) நிறைவேற்றப் பட வேண்டும்":

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972) ஆய்வுக்கு எடுத்து-க் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

இந்தச் சட்ட வரைவை முன்மொழிந்து பேசுகையில் 1964 ஆம் ஆண்டில் மதுரையில் தொடக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து அதனால் மாணவியர் பலர் மடிந்தது மதிப்பிற்குரிய உறுப் பினர்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். இத்தகைய விபத்து நிகழாவண்ணம் தடுப்பதன் பொருட்டும், பொதுக் கட்டிடங்கள் அனைத்தின் கட்டுமானமும் உறுதியாக உள்ளனவா என்பதைக் கவனத்துடன் பார்த்துக் கொள் வதன் பொருட்டும், தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமமளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 13/1965) நிறைவேற்றப்பட்டது. இது 1966 ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தைச் செயல்படுத்துவதால் தொல்லை ஏற்படும் என்று காரணம் காட்டி, இச்சட்டத்தை ரத்து செய்யவாவது வேண்டும் அல்லது இச்சட்டத்தின் ஆளுகையினின்றும் தமக்கு

@ 252 ஆம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விதி விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தனி நபர்களிடமிருந்தும் வணிகக் கழகங்கள் முதலிய பொது நிறுவனங்களிடமிருந்தும் பல முறையீடுகள் அரசுக்குக் கிடைத்தன.

இவ்வரசு, இம்முறையீடுகளை ஊன்றிக் கவனமுடன் பரிசீலித்துப் பார்த்தபிறகு, கீழ்க்காணும் சில வகையான பொதுக் கட்டிடங்களுக்கு தற்காலிகமாக விதிவிலக்கு அளித்தது ; அவையாவன—

11.61 சதுர மீட்டர் தரைப் பரப்புடைய சிறு கடைகள், ரோமன் கத்தோலிக்க மடாலயங்கள், தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைக் கட்டிடங்கள், திரைப்பட மாளிகைகள், கோவில்கள், மசூதிகள், மாதாகோவில்கள், சீக்கியர் ஆலயங்கள் சங்கங்கள் அல்லது குழாம்கள் பயன்படுத்தும் 250 சதுர அடி பரப்புடைய கட்டிடங்கள், மருத்துவர் இல்லத்தில் சிகிச்சை அறைகள், இராணுவப் பாதுகாப்பு அறிவியல் நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், படைக்கலத் தொழிற்சாலைகள், குன்னூரில் உள்ள மலைத் தோட்டக் கட்டிடங்கள் ஆகியவை மேலே சொல்லியவை அல்லது ஏனைய கட்டிடங்கள் அவசியமான நேர்வுகளில் உரிமத்துக்கான விண்ணப்பம் செய்துகொள்வதினின்றும், அவசியமான இடங்களில் இச்சட்டத்தின் கீழ் உரிமக் கட்டணங்கள் செலுத்துவதினின்றும் 31—3—1972 வரை அவ்வப்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் நடைமுறையில் இது செயல்படுத்தப்படவில்லை.

வணிகச் சமூகத்தினரும், ஏனைய பொது மக்களும் (i) இதற்கென உரிமம் எடுக்கவேண்டும் என்று சொல்வதால் தங்களுக்குத் தொல்லை உண்டாகும் என்றும் (ii) மேற்சொன்ன காரியத்திற்காக மாவட்ட நகராட்சிகள் சட்டம், ஊராட்சிகள் சட்டம், நகரமைப்புச் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், கல்விச் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களில் போதுமான விதித்துறை உள்ளது என்றும் கூறி, இச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று வேண்டுகோளை இடைவிடாமல் வற்புறுத்தியும் வந்துள்ளனர்.

இது குறித்து வந்துள்ள பல்வேறு முறையீடுகளைக் கருத்தில் கொண்டு இச்சட்டத்தை ரத்து செய்வதற்கான வேண்டுகோளும், ஏனைய சட்டங்களில் போதுமான விதித்துறை உள்ளதென்றும் கருத்தும், மேற்சொன்ன பல்வேறு சட்டங்களிலும், பொதுமக்கள் பொழுது போகுமிடங்கள் சட்டம், மாநகரக் காவலர் சட்டம்

1972 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போன்ற இன்னும் சில சட்டங்களிலும் உள்ள விதித்துறைகளை யொட்டிப் பரிசீலித்துப் பார்க்கப்பட்டன. இவற்றை விரிவாகப் பரிசீலித்துப் பார்த்தபிறகு, மேலே சொல்லிய சட்டம் எதிலும் பொதுக் கட்டிடக் கட்டுமானம் உறுதியாக உள்ளதா என்பதைக் கவனித்துக்கொள்ள விதித்துறை எதுவும் இல்லை என்பதால் இச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் வேண்டுகோளை ஒப்புக் கொள்ளக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பம் செய்துகொள்வதற்கான கால அளவை, 1972 ஏப்ரல் 1-லிருந்து மேலும் ஆறு திங்களுக்கு நீட்டிப்பதென்றும், இதற்கிடை யில் இன்றியமையாத கட்டிட வகைகளை மட்டுமே, இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவரும் விதத்தில், பொதுக் கட்டிடங்கள் எனும் சொற்றொடருக்கான பொருள் விளக்கத்தைத் தக்கபடி திருத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆகவே 100 சதுர மீட்டருக்கு மேல் தரைப் பரப்புடைய கட்டிடங்கள் மட்டுமே இச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்படும் விதத்தில் "கட்டிடம்", "பொதுக் கட்டிடம்" என்னும் சொற்றொடர்களுக் கான பொருள் விளக்கங்களை திருத்தக் கருதியுள்ளது.

இச்சட்ட வரைவு, மேற்சொன்ன முடிவைச் செயல்படுத்த விழை கிறது. இச்சொற்களோடு, இவ்வரைவினை இவ்வவையில் ஆய்விற்கு வைக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, பொதுக் கட்டிடங்கள் நல்லமுறையில் இருக்கின்றனவா என்று சரிபார்த்து வைக்கவேண்டியது அரசின் பொறுப்பு. அந்த முறையிலே பள்ளிக் கூடங்கள், மற்றக் கட்டிடங்கள் இவைகளையெல்லாம் சரி பார்ப்பது மதுரையில் சரஸ்வதி ஹைஸ்கூல் விழுந்ததன் விளைவாக வந்த காரியம். ஆனால் இப்போது எங்கள் ஊரிலே ஒரு சிறிய பள்ளிக் கூடம் இருக்கிறது. நல்ல கட்டிடமாகக் கட்டியிருக்கிறோம். சமீப காலத்திலே இந்தச் சட்டம் வந்த பிறகு, அந்தக் கட்டிடத்தினுடைய

ஸ்திரத்தன்மையைக் காட்டுவதற்காக ஒரு சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டார்கள். அது ஐந்தாவது வரை இருக்கும் பள்ளிக்கூடம். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அந்த சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டபோது, பி.டபிள்யு. டிபார்ட்மென்டிலே அதற்கு 100 ரூபாய் கேட்கிறார்கள். இந்த லைசன்சை ஒவ்வொரு வருடமும் பெறவேண்டிய நிர்பந்தம் இருக்கிறதா? அல்லது அந்தக் கட்டிடம் 20 வருஷம் வரைக்கும் உறுதியாக இருக்கும் என்று அவர்கள் சொல்லிவிட்டால், அடுத்த வருஷம் வாங்க வேண்டாத நிலைமையில் சட்டத்தைத் திருத்தி அதற்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு வருஷமும் 100 ரூபாய் கொடுத்து, அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால், அது சாதாரண எலிமின்டரி ஸ்கூல் ஆக இருக்கின்ற நிலையிலே, வருடாவருடம் 100 ரூபாய் கொடுத்துக்கொண்டிருப்பது, அந்தப் பள்ளியை "மெயின்டெயின்" பண்ணுகிறவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். அதையெல்லாம் விளக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். மற்ற விஷயங்களை நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொல்வார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, in moving this Bill, the Hon. Minister has advanced all the arguments that are necessary for this House to repeal this Bill rather than to pass it. I think this is one of those futile pieces of legislation that remain inactive on our statute-book and if there is any more unnecessary piece of legislation, Sir, I think this is the most unnecessary of them all. I shall explain why it is so. One school building collapsed in Madurai and because of that an Act in the Legislature in the year 1965 justifying the inspection of all public buildings had been brought forth as if the Government possessed the wisdom of expertise on administrative skill to go through hundreds of, thousands of applications and to dispose of all these applications. It is indeed a commentary on the utility of this Bill that right from 1965 to 1972, the Government have not yet found it possible to enforce this Act and every year they have been granting exemption for one more year for people to submit licences where the public assemble. Sir, I think this is a perfectly useless piece of legislation and although the Government may have passed it in 1965, it is absolutely unnecessary to renew this in any modified form whatsoever. Perhaps, we may be thankful that an amendment

has been put because in the original Bill, the definition of "Public building" was so vague and so general that none of us knew what exactly was a public building and what was not, whether shops would be included, etc. I am glad that at least this amendment has been brought forward. But even here, Sir, I do not think it is going to be possible for Government to ever administer this Act efficiently, properly or in time. I shall explain why, Sir. For example, they have stated that schools, hostels, libraries, hospitals, nursing homes, dispensaries, clubs, lodging houses, choultries, etc., should submit applications to get a certificate from the Government as to whether the building is in a satisfactory condition or not. Sir, with our experience of Government, do we really think that all these people who have these public buildings are going to submit licences or whether the Government have the administrative personnel to prosecute all those people who do not submit licences?

In the Madras District Municipalities Act of 1920, I remember, Sir, that there is a provision which says that if a building is found to be in a dilapidated or dangerous condition, the Municipality or the local body concerned may issue a notice to the owner of the dilapidated building asking him to show cause why the building should not be demolished. May I ask the Hon. the Minister for Local Administration who is in charge of the 92 Municipalities, whether any Municipality in the State of Tamil Nadu has invoked the provisions of the District Municipalities Act and has sent a notice to the owner of any dilapidated building asking him to remove the building. There are, Sir, in the slum areas, in the overcrowded areas, perhaps even in the City of Madras, in George Town, some dangerous buildings, very old buildings put up hundred years ago which are to be demolished. But I do not think, Sir, a Bill of this nature is necessary to correct all these defects. In fact, the District Municipalities Act, the City Corporation Act—all these are there but as far as schools are concerned, I think they are administered by the Education Department. We are getting a Bill to-morrow about the management of private schools. There also inspection authorities are there to certify whether the school should be permitted or not. I do not see how exactly this Act is going to be implemented and I think it

is of tremendous nuisance value and the only thing is that the Hon. the Minister for Revenue has been surreptitiously increasing the licence fees from 1966. I intend one day to place the matter before the Committee on Subordinate Legislation. I think it is gross misuse of the powers that the Legislature has delegated to the Government. There is a tremendous increase in licence fees. What was Rs. 5 previously is now Rs. 50 and what was Rs. 10 is now Rs. 100. Probably from the point of view of revenue, my hon. Friend Thiru Jayarama Reddiar mentioned why he should give Rs. 100 for application and get his school certified as a proper building for the children. In fact, if this rule is applied to Government Schools, half the schools managed by the Hon. the Minister for Education would not receive any licence. They are in a dangerous and dilapidated condition, especially B Wing Schools, Board High Schools. More than 600 of them are in such a dangerous condition that none of them would be licensed. Of course, I presume this Act exempts all Government buildings from its operation and this will apply only to private individuals. But even so, Sir, I consider this to be a singularly futile and unnecessary piece of legislation and the sooner we repeal it, the better it will be for all of us. Thank you, Sir.

Mr. CHAIRMAN : Thiru Narayanaswamy.

Thiru S. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, I am not speaking on this Bill

Thiru G. SWAMINATHAN : May I be permitted to say, Sir, that the Benches pertaining to the Members of the Ruling Party are too thin? We are depressed about it.

Mr. CHAIRMAN : That is all right. I once mentioned about the Members on the side of the Treasury Bench.

* திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் சொன்னமாதிரி, சிறிய ஆரம்பப் பள்ளியை வைத்துக்கொண்டு, நடத்தக்கூடிய ஒருவர், வருடம் 100 ரூபாய் "அப்ளிகேஷன்" Application Fee கொடுத்து "லைசென்ஸ்" வாங்கி, பள்ளியை நடத்துவது என்பது எத்தனை நாளைக்கு ஓடும் என்று தெரியவில்லை. அதனால் இந்தச் சட்டத்தை நாம் சரியாக

அமல்படுத்த முடியவில்லை. லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று யாரையும் வற்புறுத்த முடியவில்லை. யாரும் லைசென்ஸ் வாங்குவது மில்லை. ஆகவே, இந்தச் சட்டம் ஏட்டில் இருப்பதைவிட, இல்லாமல் இருப்பதே மேல் என்ற அளவுக்கு வந்துவிட்டது. உண்மையில் சரியாக இது அமல்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னால், "லைசென்ஸ் பீ"-யை 10 ரூபாய்க்கு மேல் வைக்கக்கூடாது. ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் நடத்துபவர், வருஷம் 100 ரூபாய் கொடுத்துக்கொண்டு, பி.டபிள்யு.டி. அசிஸ்டன்ட் இன்ஜினியரிடம் போய் கட்டிடம் நன்றாக இருப்பதாகச் சர்ட்டிபிகேட் வாங்கி வருவதென்பது, நடக்கக்கூடிய காரியமல்ல. ஆகையால் இதை முதலில் மாற்ற வேண்டும். விதிகளிலே அதைத் திருத்த வேண்டுமே ஒழிய, சட்டத்தின்பாற்பட்ட விஷயம் அல்ல. ஆகையால் விதிகளிலே போடும் போது, "லைசென்ஸ் பீ", சர்ட்டிபிகேட்டுக்காக வேண்டி, இன்ஜினியர்களுக்குக் கட்டும் கட்டணம் 10 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்று திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி இது பழைய சட்டம். இதன் "மெரிட்ஸ், டிமெரிட்ஸ்" பற்றிப் பேச வேண்டியதில்லை. இந்தச் சட்டம், எங்கள் மதுரை நகரத்திலே நடந்த ஆபத்தான காரியத்தை முன்னிட்டுத்தான் வந்தது. ஆகவே, இந்தச் சட்டம், நல்ல சட்டம் தான். இதை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை ஆராய்ச்சி செய்து அதை விலக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளில் இதுவும் ஒன்று. இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். ஒரு "நாமினல்" ரேட், 5 ரூபாய், 10 ரூபாய் என்று வைத்தால் போதும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட வரைவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட சட்டத்தினுடைய அவசியத்தை அவர்கள் உணர்த்தினார்கள். நேர்வழி என்பது ஒரேவழிதான். நேர்வழியாக இருக்குமேயானால், ஒரு சட்டமே போதும். ஆனால் நேர் கோட்டிலிருந்து கோணல் கோடு இழுக்க ஆரம்பித்தால், ஏராளமான கோடுகள் இழுக்கலாம். ஆகவே, கோணல் வழிகள் ஏராளமாக இருக்கிற காரணத்தால், பல்வேறு சட்டங்களின் மூலமாக அந்த வழிகளையெல்லாம் அடைக்க வேண்டுமென்று அவசியம் ஏற்பட்டதன் காரணமாக, பல்வேறு

TRUTH ALONE TRIUMPHS

சட்டங்களைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியமாதிரி, பல்வேறு சட்டங்களின் மூலமாகக் கட்டுப்படுத்துகிற சூழ்நிலை இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலமாகத்தான் அதனுடைய நோக்கங்கள் நிறைவேறும். அதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அரசாங்கத்திடம் இருக்கிற கட்டிடங்கள், மற்றவைகளுக்கெல்லாம் லைசென்ஸ் பெறவில்லை என்று சொன்னார்கள். அதிலே தவறு ஏற்படுமானால், கேட்க முறை இருக்கிறது, வழி இருக்கிறது, வகை இருக்கிறது. அதனை மேற்பார்வையிடுவதற்குத் தவறுவோமேயானால், கேட்க நீங்களும் இங்கே இருக்கிறீர்கள். ஆனால் தனியார் துறையிலே நடக்கிறதைக் கேட்பதற்கு சட்டத்தின் மூலம் அல்லாமல் வேறு வழியில்லை என்ற காரணத்தால், கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் சார்பாக நடைபெறுகின்றதைக் கட்டுப்படுத்த பல்வேறு அமைப்புகள், முறைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால்தான் இப்படிப்பட்ட சட்டங்கள் தேவையில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இந்தச் சட்டம் கொண்டுவந்தபோது, சாதாரணமானவர்களையும், ஏராளமானவர்களையும் பாதிக்குமென்ற காரணத்தினால்தான், எல்லோரும் வந்து, விண்ணப்பங்கள் தந்து, முறையீடு செய்து கொண்டதன் காரணமாக இதை ஒத்தி வைத்து வந்தோம். சாதாரணமாக எல்லோரும் பயமுறுத்தப்படுகிற அளவுக்கு அல்லது கஷ்டப்படுத்தப்படுகிற அளவுக்கு இருக்கக்கூடாது என்ற காரணத்தால், 100 சதுர மீட்டர் அளவுக்குக் குறைந்த எந்தக் கட்டிடமாக இருந்தாலும், அதற்கு விதி விலக்கு தரலாம் என்றும் அதற்கு மேல் போகின்றபோதுதான், ஏராளமான மக்கள் அதில் புழங்கவேண்டிய அவசியம் ஏற்படுவதால் அதற்கு மட்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரலாம் என்றும், இந்தச் சட்டம் கொண்டுவராமல் இருக்கலாமா என்றும் வேறு பல சட்டங்களையெல்லாம் பார்த்தோம். இந்தச் சட்டம் இருக்கவேண்டுமென்ற அவசியம் இருந்த காரணத்தினால் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் கூறியதுமாதிரி ஆண்டுக்கு ஒரு முறையல்ல, மூன்று ஆண்டுக்கு ஒரு முறை இந்த லைசென்ஸ் எடுத்தால் போதும் என்றுதான் சட்டம் இருக்கிறது.

1972 ஆகஸ்ட் 24]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, மூன்று ஆண்டு என்றாலும்கூட சாதாரண எலிமெண்டரி ஸ்கூலுக்கு நூறு ரூபாய் கொடுக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக 50,000 ரூபாய்க்குள்ளே மதிப்புள்ள கட்டிடங்களுக்கு 10 ரூபாய்தான் மூன்று ஆண்டுக்கு; 50,000-லிருந்து 2 லட்சம் வரை மதிப்புடைய கட்டிடங்களுக்கு 25 ரூபாய் மூன்று ஆண்டுக்கு; இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டு எவ்வளவு ஆனாலும் 50 ரூபாய் தான் மூன்று ஆண்டுக்கு. அது தான் உரிமக் கட்டணமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகச் செலுத்தினால், தனியாக விண்ணப்பித்துக் கொண்டால், அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்தச் சட்டத்தின்கீழ் இம்மாதிரி வாங்குவதற்கில்லை. ஆகவே, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபொழுது, இதிலே மறுபடியும் ஏதாவது இடுக்கண்கள், இடையூறுகள் ஏற்படுமென்று தெரியுமேயானால், அந்தச் சங்கடங்கள் ஏற்படாத அளவுக்கு மறுபடியும் நாம் திருத்தங்கள் கொண்டுவரலாம். ஆனால் இப்போது 6 ஆண்டுகாலமாக நடைமுறையில் செயல்படுத்தப்படாமலேயே இருந்த சட்டத்தை, செயல்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் மற்றவர்களைக் கலந்துகொண்டு, வியாபாரிகளைக் கலந்துகொண்டு ஓரளவுக்கு இந்த நிலைக்குக் கொண்டுவந்தோம். இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அரசாங்கக் கட்டிடங்களிலும் சில ஆபத்தானவை என்று கருதப்பட்டு, வசிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டது. நான் "எஸ்டிமேட்" கமிட்டியில் இருக்கக்கூடிய காரணத்தினால், நம்முடைய டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீஸஸ் அலுவலகம் 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலேயே வசிக்க லாயக்கற்றது என்று சொல்லப்பட்டதாகவும், இன்னும் 5 ஆண்டுகளாக அதே இடத்தில் அந்த அலுவலகம் நடப்பதாகவும் தெரிகிறது. அதுபோன்ற அரசு அலுவலகக் கட்டிடங்களுக்கு இதன் மூலமாக ஏதாவது வழி வகை கிடைக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே வேறு பல சட்டங்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள்.

District Municipalities Act, Panchayats Act, Town Planning Act, Factories Act, City Police Act, Public Resort Act எல்லாம்

இருக்கின்றன. அவற்றின்கீழ் வருகின்றன. அவை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அவைகளை நடைமுறைப்படுத்தாதன் காரணமாக சிலபல கேடு பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(7) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவையில் 14—12—1971-ல் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதனை ஆய்வு செய்வதற்காக ஆய்வுக் குழு ஒன்றிற்கு அது அனுப்பப்பட்டது. ஆய்வுக் குழு கேட்டுக்கொண்ட தன் பேரில், வணிகக் கழகங்களும், ஏனைய வர்த்தகச் சங்கங்களும் சட்ட முன்வடிவில் செய்யக் கருதிய திருத்தங்கள் குறித்து கருத்துரை வழங்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டன. ஆய்வுக்குழு பரிசீலனை செய்வதற்காக 30 வர்த்தக சங்கங்களிடமிருந்து ஆலோசனைகளும், கருத்துரைகளும் பெறப்பட்டன. ஆய்வுக் குழு மொத்தத்தில் நான்கு முறை கூடியது. சட்ட முன்வடிவின் ஒவ்வொரு பிரிவையும் பரிசீலித்து 3 —7—1972-ல் நடைபெற்ற கூட்டத்தில் தனது ஆய்வுகளுக்கு இறுதி வடிவம் கொடுத்தது. ஆய்வுக் குழுவின் அறிக்கையும் அக்குழு செய்த திருத்தங்களுடன் கூடிய சட்ட முன்வடிவும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. குழு செய்த முக்கியமான மாறுதல்களாவன :—(1) சட்ட முன்வடிவின் 2-வது பகுதியில் தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 2 (V) பிரிவில் உள்ள திருத்தம் விவசாயிகள் விற்பனை செய்யும் ரப்பர், பாக்கு இவைகளுக்கு விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரை அத்திருத்தம் குழுவால் விட்டுவிடப்பட்டுள்ளது. சட்ட முன்வடிவின் 3-வது பகுதியில், சட்டத்தின் 3 (3) பிரிவில் உள்ள திருத்தங்கள் சரக்குகளை விற்பனை செய்கிற வியாபாரியும் சரக்குகளைக் கொள்முதல் செய்கிற வியாபாரியும் கொடுக்கவேண்டிய உறுதி மொழியையும் வரி விதிப்பதை விற்பனை முனையிலிருந்து கொள்முதல் முனைக்கு மாற்றுவதையும் பொறுத்தவரை அத்திருத்தங்களை இக்குழு நீக்கி உள்ளது. சட்ட முன்வடிவின் 5, 7, 8, 12, 19, 20, 25-வது பகுதிகளில் குறிப்பிட்டுள்ள கால அளவை ஒரு சீராக 5 ஆண்டுகள் எனக் குழு

@ 263–269 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.